மக்களின் நம்பிக்கையைப் பெற முடியாத ஒன்றிய பா.ஜ.க. அரசு

அமலாக்கத் துறையை தவறாகப் பயன்படுத்துகிறது!

காங்கிரஸ் தலைவர்கள் கண்டனம்!

புதுடெல்லி, அக். 27-

ராஜஸ்தான் சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்த மாநில காங்கிரஸ் தலைவர் கோவிந்த் சிங் தோடாஸ்ரா உள்ளிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர்களுக்குச் சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தி வருவது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் நம்பிக்கையைப் பெறமுடியாத பா.ஜ.க. அமலாக்கத்துறையை தவறாகப் பயன்படுத்துகிறது என ராஜஸ்தான் முதல்வரும், தோல்வி பயத்தால் பா.ஜ.க. அமலாக்கத்துறையை இறக்கியுள்ளது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும் விமர்சித்துள்ளனர்.

ராஜஸ்தானில் கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தகுதி தேர்வில் வினாத்தாள்கள் கசிந்த விவகாரம் தொடர்பாக சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து அமலாக்கத் துறை விசாரணை நடத்தி வருகிறது. இந்த வழக்குத் தொடர்பாக ராஜஸ்தான் மாநில காங்கிரஸ் தலைவர் கோவிந்த் சிங் தோடாஸ்ரா உள்ளிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர்களுக்குச் சொந்தமான 7 இடங்களில் அமலாக்கத்துறை நேற்று திடீர் சோதனை நடத்தி வருகிறது. இதேபோல், ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட்டின் மகனுக்கும் அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியுள்ளது.

ராஜஸ்தான் முதல்வர் கண்டனம்!

எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதற்காக அமலாக்கத் துறை, சி.பி.ஐ. போன்ற விசாரணை அமைப்புகளை ஒன்றிய மோடி அரசு பயன்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன. அதை நிரூபிக்கும் வகையில், ராஜஸ்தான் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அமலாக்கத்துறை சோதனை நடத்தி வருவது, அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சோதனைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள முதலமைச்சர் அசோக் கெலாட், இடைவிடாத அமலாக்கத்துறை சோதனைகளே, தேர்தலில் காங்கிரஸின் வெற்றிக்கு ஆதாரமாக திகழ்கிறது என்றும், மக்களின் நம்பிக்கையைப் பெற முடியாத பா.ஜ.க., காங்கிரஸுக்கு எதிராக அமலாக்கத் துறையை தவறாக பயன்படுத்துகிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

மோடி அரசின் செயலுக்கு கார்கே கண்டனம்!

ராஜஸ்தானில் தோல்வி பயத்தால் அமலாக்கத்துறையை பா.ஜ.க. களத்தில் இறக்கி விட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேர்தல்கள் நெருங்கியுள்ள நிலையில், அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறை உள்ளிட்டவை பா.ஜ.க.வின் உண்மையான தேர்தல் பணியாளர்களாக மாறி விட்டதாக விமர்சித்துள்ளார். ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தலில் தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்துள்ள பா.ஜ.க., தற்போது விசாரணை அமைப்புகளை காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராக இறக்கிவிட்டுள்ளதாக அவர் சாடியுள்ளார்.

சத்தீஸ்கரை தொடர்ந்து ராஜஸ்தானில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராக அமலாக்கத்துறை நடவடிக்கையை தொடங்கியுள்ளதென்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். மோடி அரசின் இந்த சர்வாதிகாரப் போக்கு, ஜனநாயகத்துக்கு ஆபத்தானது என தெரிவித்துள்ள மல்லிகார்ஜுன கார்கே, விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக தொடர்ந்து போராட்டம் நடத்தப்படும் என்றும், இதற்காக பா.ஜ.க.வுக்கு பொதுமக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

பள்ளிப் பாடப் புத்தகங்களில்

இந்தியாவின் பெயரை 'பாரத்' என மாற்ற பரிந்துரை செய்வதா?

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, அக்.27-

"பள்ளிப் பாடப் புத்தகங்களில் இந்தியாவின் பெயரை 'பாரத்' என மாற்ற பரிந்துரை செய்வதா?" என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கல்வி ஆராய்ச்சி புதிய கவுன்சிலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பள்ளிப் பாடப் புத்தகங்களில் இந்தியாவின் பெயரை பாரத் என மாற்ற கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் (என்.சி.இ.ஆர்.டி.)உருவாக்கிய உயர்நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இது குறித்து இக்குழுவின் தலைவரும், வரலாற்று ஆராய்ச்சி இந்திய கவுன்சில் உறுப்பினருமான ஐசக் ,"பள்ளிப் பாடத்திட்டத்தை மாற்றியமைப்பதற்காக உருவாக்கப்பட்ட என்சிஇஆர்டி, சமூக அறிவியல் பாடத்துக்கான உயர் நிலைக் குழுவை அமைத்தது.

என்சிஇஆர்டி புதிய பாடப் புத்தகங்களில் மாற்றங்களை செய்ய 7 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒருமனதாக பரிந்துரை செய்துள்ளது.

அரசியல் சாசனத்தின் 1 (1) ஆவது பிரிவில் இந்தியாவின் பெயர் ஏற்கெனவே பாரத் என்று உள்ளது. பாரத் என்பது பழங்கால பெயர். 7,000 ஆண்டுகள் பழமையான விஷ்ணு புராணம் போன்ற பழங்கால புத்தகங்களில் பாரத் என்ற பெயர் குறிப்பு உள்ளது.

கிழக்கு இந்திய கம்பெனி வந்த பின்பும், 1757ம் ஆண்டு பிளாஸி போருக்குப் பின்புதான் இந்தியா என்ற பெயர் பயன்படுத்தப் பட்டது. அதனால், அனைத்து வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களில் இந்தியா என்ற பெயருக்கு பதில் பாரத் என்ற பெயரை பயன்படுத்த வேண்டும் என உயர்நிலைக் குழு ஒருமனதாக பரிந்துரை செய்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 1ல், "இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றிய பாஜக அரசு 'பாரத்' என்பதை மட்டுமே அதிகாரபூர்வ பெயராக மாற்ற முடிவு செய்தால், அவர்கள் அரசியலமைப்பின் 1ஆவது பிரிவைத் திருத்துவதற்கான மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த வேண்டும்.

குறிப்பாக 368ஆவது பிரிவு, அரசியலமைப்பு சட்டத்தை ஒரு சாதாரண பெரும்பான்மை திருத்தம் (Simple Majority Changes) அல்லது சிறப்பு பெரும்பான்மை திருத்தம் (Special Majority Changes) மூலம் திருத்த அனுமதிக்கிறது.

அரசியலமைப்பின் பிரிவு 1இல் மாற்றம் கொண்டுவருவது உட்பட அரசியலமைப்பின் மிகமுக்கிய மாற்றங்களுக்கு, அவையில் இருக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் சிறப்புப் பெரும்பான்மை (66 விழுக்காடு) தேவை என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே, இந்தியா என்ற பெயரை பாரத் என மாற்ற வேண்டும் என்றால், அவையில் 66 விழுக்காடு உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

இரு அவைகளிலுமே பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை காலில் போட்டு மிதித்து வரும் ஒன்றிய பாஜக அரசு, நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வராமலேயே இந்தியாவின் பெயரை பாரத் என்று நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் ஆகியவற்றின் பெயர்களை

மாற்றி திருத்த புதிய சட்ட முன்வரைவு ஒன்றை நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்துள்ளார்.

அதன்படி இந்திய தண்டனைச் சட்டத்திற்குப் பதிலாக பாரதீய நியாய சன்ஹிதா, குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் பதிலாக பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, இந்திய சாட்சியச் சட்டத்திற்குப் பதிலாக பாரதீய சாக்ஷியா என அழைக்கப்படும் என்று இந்த சட்ட திருத்த முன்வரைவில் கூறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தற்போது என்.சி.இ.ஆர்.டி., பள்ளிப் பாட புத்தகங்களில் இந்தியாவின் பெயரை பாரத் என்று மாற்றுவதற்கு முயற்சிப்பது அதன் அதிகார வரம்பை மீறியது மட்டுமல்ல, சட்ட நெறிமுறைகளையும் மீறிய செயலாகும். கடும் கண்டனத்திற்குரிய இந்தப் பரிந்துரையை ஏற்கக் கூடாது.

இவ்வாறு வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

அகவிலைப்படி 4 சதவீதம் உயர்த்தி ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி !

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை அக்:27

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு. தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஓய்வூதியதாரர்கள் 16 லட்சம் பேர் பயன்பெறும் வகையில் நான்கு சதவீத அகவிலைப்படி உயர்வை அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். இது ஆசிரியர்கள்,அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுத்தி உள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கொரோனாவைக் காரணம் காட்டி அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு போன்றவை நிறுத்தப்பட்டது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு தி.மு.க. ஆட்சி அமைந்த உடன் 14 சதவீத அகவிலைப்படி உயர்வை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பின்பு ஒன்றிய அரசு அகவிலைப்படி உயர்த்தும் போது அந்த உயர்வு தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆறு மாதங்கள் கழித்து வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில் ஒன்றிய அரசு எப்போதெல்லாம் அகவிலைப்படி உயர்வை உயர்த்துகிறதோ அன்றைய தினமே தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வை உயர்த்தி வழங்குவார்கள் என்றும்,தற்போது ஆறு மாதங்கள் காலதாமதமாக வழங்கப்படுகிறது என்ற கருத்தை முன்வைக்கும் போது கடுமையான நிதி நெருக்கடி காரணமாக அந்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் இனி வருங்காலங்களில் நிதி நெருக்கடிகள் இருந்தாலும் ஒன்றிய அரசு எந்த தேதியில் எத்தனை சதவீதம் அகவிலைப்படி உயர்த்துகிறதோ அந்த தேதியில் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உயர்த்தப்படும் என்று கடந்த அகவிலைப்படி உயர்வின் போது ஆணையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருந்தார்கள்.

சொன்னதை செய்வோம் செய்வதை சொல்வோம் என்பது போல கடந்த அகவிலைப்படி அரசாணையில் சொன்னதை இன்று செய்து காண்பித்து இருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர். ஒன்றிய அரசு உயர்த்திய நான்கு சதவீத அகவிலைப்படி உயர்வை தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நான்கு சதவீத அகவிலைப்படியை உயர்த்தி வழங்கி உள்ளது.

ஒன்றிய அரசு 1.7. 2023 முதல் முன்தேதி இட்டு வழங்கியுள்ளது. அதேபோலவே தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன் தேதி இட்டு 1.7.2023 முதல் வழங்கி உள்ளார்கள். நிலுவைத் தொகையுடன் அகவிலைப்படி உயர்வை பெற உள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஓய்வூதிய தாரர்கள் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளார்கள்.

மேலும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் ஒவ்வொரு கோரிக்கைகளையும் படிப்படியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்று வார்கள் என்ற நம்பிக்கை மேலும் அதிகரித்துள்ளது. அகவிலைப்படி உயர்வை அறிவித்து 16 லட்சம் குடும்பங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக கோடான கோடி நன்றியை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எங்களின் பிரதான கோரிக்கையான மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துதல், கடந்த ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சரண்டர் விடுப்பு ஒப்படைப்பு போன்றவற்றை விரைவில் கிடைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவண செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் வேண்டுகோளாக வைக்கிறோம்.

இவ்வாறு கு. தியாகராஜன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியால்

பட்டியலிடப்படாத வழக்குகளை நீதிபதிகள் விசாரிப்பது முறைகேடானது!

உச்சநீதிமன்றம் கருத்து!

புதுடெல்லி, அக். 27-

உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியால் பட்டியலிடப்படாத வழக்குகளை நீதிபதி கள் விசாரிப்பது முறைகேடானது என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் குற்றவாளி ஒருவர் தன் மீதான கிரிமினல் குற்றவழக்கில் உயர் நீதிமன்றத்தில் நிவாரணம் கிடைக்காததால் சிவில் வழக்காகப் பதிவு செய்துள்ளார். அந்த சிவில் வழக்கை விசாரித்த மற்றொரு உயர் நீதிமன்ற நீதிபதி, குற்றவாளி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று இடைக்கால நிவாரணம் வழங்கி உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அப்போது தான் இந்த முறைகேடு அம்பலமாகியுள்ளது.

சிவில் வழக்கு ஒன்றின் மூலம் 6 எப். ஐ.ஆர்களை இணைத்து உயர் நீதிமன்றம் எப்படி உத்தரவிட்டது. இது மிகவும் அசாதாரணமானது, அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. சட்ட நடைமுறையை முறைகேடாக பயன்படுத்தியுள்ளனர் என்றும், கிரிமினல் வழக்கில் மற்றொரு நீதிபதி நிவாரணம் வழங்காத நிலையில் இந்த விசாரணை எப்படி நடந்தது? என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. பின்னர் இந்த மனுவை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம் சிவில் வழக்குத் தொடர்ந்த நபருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நீதிபதி களுக்கும் சில ஆலோசனைகளை வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. உயர்நீதிமன்றங்களில் தலைமை நீதிபதி யால் பட்டியலிட்டு ஒதுக்காத எந்த வழக்குகளையும் நீதிபதிகள் விசாரிக்க கூடாது என்றும், பட்டியலிடப்படாத வழக்குகளை விசாரிப் பது முறைகேடானது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மேலும், நீதிபதிகள் ரோஸ்டர் நடைமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

சென்னை, வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர்

39 அ வட்டம் மீனவரணி இ.ஆறுமுகம் இல்லத் திருமணம்!

டி.கே.எஸ்.இளங்கோவன் - தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி வாழ்த்து

சென்னை, அக். 27 -

சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நேகர் பகுதி 39 அ வட்டம், மீனவரணி துணை அமைப்பாளர் இ.ஆறுமுகம் சகோதரர் மகன் சி. வின்னேஷ்க்கும் பெங்களூர் கே.பாண்டுரங்கன் - லதா ஆகியோரின் மகள் பி.பிரியங்காவுக்கும் திருமணம் இன்று (27.10.2023) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு மேல் இராயபுரம் சூரிய நாராயண செட்டி தெருவில் உள்ள அறிவகம் திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

இம் மணவிழாவில் கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்டச் செயலாளர் தா. இளைய அருணா, கலாநிதி வீராசாமி எம்.பி., ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ., துரை சந்திரசேகர் எம்.எல்ஏ., எம்.எஸ். திரவியம், எம்.ஈ.ராஜா, ஆர்.டி.குணாநிதி, இரா.மதிவாணன், நா.மனோகரன், கு.நற்குணன், இரா.லட்சுமணன், புத்தன், ஜெபதாஸ் பாண்டியன், சத்திய நாராயணன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே. பாலு, எம்.வேதலட்சுமி, ராஜேஸ்வரி, எம்.எம்.சாமி, ஆர். ரமேஷ், ஈ.கார்த்திக், ஆர்.வெங்கட், எம்.சுரேஷ்குமார், எம்.சதீஷ்குமார், கிருபாகரன், செந்தில், டி.மாசிலாமணி, வட்ட நிர்வாகிகள் கே.அடைக்கலம், கல்வி ராஜன், கே.சரவணன், பி.அனிதா, ரங்கநாதன், சுரேஷ்குமார், து.ஆனந்த், ஆர்.அருண், இளங்கோவன், தமிழ் சிவகுரு, சிவஞானம், க.சேகர், துரைசாமி, வேலாயுதம்,

தாமரைசெல்வி, எம்.மலர்கொடி, மலர்விழி, எஸ்.அன்னக்கிளி க.ஜெயா, ஆர். உமா, இராஜகுமாரி, கோமதி, கலைவாணி மற்றும் கழகத் தோழர்கள் கலந்துகொள்கின்றனர்.

39 அ வட்டச் செயலாளர் த.வ.மு.கஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா டி. குலசேகரன்
அக்டோபர் 27 (2001)

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாசாபாத் ஒன்றியம், பரந்தூர் ஒன்றியத்தில் கிளைச் செயலாளர், ஒன்றிய பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி, தலைமை பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

பஞ்சாயத்து தலைவர், ஒன்றிய பெருந்தலைவர், மாவட்ட வளர்ச்சி குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை பணி நிலையம் தலைவர் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளில் ஈடுபட்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர். இது தவிர கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ.பங்கேற்பு

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் அறிவிப்பு !

சென்னை அக்:27

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் தா. இளையஅருணா ஆலோசனைப்படி இன்று (27.10.2023 வெள்ளிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் அப்போலோ மருத்துவமனை அருகில் பகுதி அவைத் தலைவர் என்.அனிபா தலைமையில் பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், ஆர்.டி.ராஜா,கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்திற்கு பகுதி நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதியைச் சார்ந்த மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயனாளர் இரா.லட்சுமணன் கேட்டுக் கொள்கிறார்.

பொருள் : கழக இளைஞர் அணி செயலாளர்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி பொதுமக்களிடம் கையெழுத்து பெறுதல் தொடர்பாக.

வாக்காளர்பட்டியல் சரி பார்த்தல் பணி மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் அறிவித்துள்ளார்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் சட்டமன்ற தொகுதிகளின் பாக முகவர்கள் (BLA2) கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

கழக தலைவர் - முதல்வர் அறிவுறுத்தலின்படி கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் சட்டமன்ற தொகுதிகளின் பாக முகவர்கள் (BLA2) கூட்டம் வருகிற 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை கீழ்க்கண்ட அட்டவணைப்படி மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

சட்டமன்ற தொகுதி	நாள்	நேரம்	இடம்
ஆயிரம் விளக்கு	29.10.2023	காலை 9 மணி	காமதேனு TUCS திருமண மண்டபம் அண்ணா சாலை, தேனாம்பேட்டை.
அண்ணாநகர்	29.10.2023	மாலை 4 மணி	G.G. மஹால் எம்.எம்.டி.ஏ.காலனி (பஸ் டிப்போ பின்புறம்) கூளைமேடு

இதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், நா.எழிலன், தொகுதி பொறுப்பாளர்கள் கவிஞர் காசி முத்துமாணிக்கம், டாக்டர் கலைகதிரவன், பகுதி செயலாளர்கள் ந.ராமலிங்கம், மா.பா.அன்புதுரை, ச.பரமசிவம், வினோத் வேலாயுதம் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஆயிரம்விளக்கு, அண்ணாநகர் பகுதி நிர்வாகிகள், ஆயிரம்விளக்கு, அண்ணாநகர் வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் பாக முகவர்கள் (BLA2) மட்டும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நே.சிற்றரசு
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.